சத்தீஸ்கர் மாநில

# முதலமைச்சர் பூபேஷ் பாகேல் பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!



சென்னை, ஆக. 25-

சத்தீஸ்கர் மாநில முதலமைச்சர் பூபேஷ் பாகேல் பிறந்தநாளை முன்னிட்டு அவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**சத்தீஸ்கர் மாநில முதலமைச்சர் பூபேஷ் பாகேல் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்.**

**வெற்றி, வளர்ச்சி மற்றும் வளம் நிறைந்த ஆண்டாக அமைய வாழ்த்துகள்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாடு அரசின் 'தகைசால் தமிழர்' விருது பெற்ற திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களை மேனாள் ஒன்றிய அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. இராசா அவர்கள் சந்தித்து வாழ்த்து தெரிவித்து பொன்னாடை அணிவித்தார்.

1824-ல் வள்ளலார்! 1924-ல் வைக்கம் போராட்டம்!

# 2024-ல் நமக்கான போராட்டத்தை முன்னெடுப்போம்!

## இந்தியா நமக்கானது என்பதை உருவாக்குவோம்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. உரை!

வள்ளலார் நாத்திகர் என்று நிரூபித்தால் ஒரு கோடி ரூபாய் தருவதாக அர்ஜுன் சம்பத் சவால் விட்டிருக்கிறார். நான் பதில் தருகிறேன். பெரியார் வேதங்களை மறுக்கிறார். எனவே அவரை நாம் நாத்திகர் என்று குறிப்பிடு கிறோம். அதுபோலவே வள்ளலாரும் வேதங்களை மறுக்கிறார்; அதனால் நாம் அவரை நாத்திகர் என்று குறிப்பிடுகிறோம்.

எனவே அர்ஜுன் சம்பத் அவர்கள் சவால்விட்ட தொகை ஒரு கோடி ரூபாயை விழா குழுவிற்கு உடனடியாக வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

பெரியார் வேத ஆகமங்களை மறுத்ததோடு மட்டுமல்லாமல் சாகும் வரை நாத்திகராகவே வாழ்ந்து காட்டினார். அவர் வழிவந்த கலைஞரும் சமூகநீதிக் கோட்பாடுகளை தூக்கிப்பிடித்தார். அருந்ததியினர் மக்களுக்கு மூன்று சதவிகிதம் உள் இட ஒதுக்கீடு வழங்கியது உட்பட சமூக நீதியை பாதுகாப்பதற்கான ஏற்பாடாகும்.

பெரியார் பார்ப்பனர்களை, 'பிராமணியம்' என்ற குறிப்பிட்ட சொல்லாடல் மூலம் சமூக வெறுப்பை வளர்க்கவே பயன்படுத்தியதாக கூறு கின்றனர். அது சரியல்ல; யாரெல் லாம் பிராமணியக் கோட்பாடுகளை கடைப்பிடிக்கிறார்களோ, அவர்களை மட்டுமே அச்சொல் சுட்டிக் காட்டுகிறது. சமத்துவத்திற்கு எதிராக, சகோதரத்துவத்திற்கு எதி ராக, சுதந்திரத்திற்கு எதிராக யாரெல்லாம் செயல்படுகிறார்களோ அவர்கள் 'பிராமணியம்' என்ற கோட் பாட்டை கடைப்பிடிக்கிறார்கள். எனவே நாம் அவர்களை எதிர்க்க வேண்டிய நிலை உருவாகிறது. பார்க்கக் கூடாத சமூகம், நெருங்கக் கூடாத சமூகம், தொடக் கூடாத சமூகம் என்று ஏற்றத் தாழ்வுள்ள பாகுபாடுகளை உரு வாக்கி மக்களை பிரித்தாளும் சூழ்ச்சி யில் சனாதன அதர்மம் கடைப் பிடிக்கப்பட்டதால் அதை பெரியார் கடுமையாக எதிர்த்தார், விமர் சித்தார். சூரியன் உதயமாவதற்கு முன்னும், சூரியன் மறைந்த பின்னும் தங்களுடைய தேவைகளை முடித்துக் கொள்ள வேண்டும் என்று ஒரு சமூகத்தையே ஒதுக்கி பகலில் நடமாட விடக்கூடாது என்று தீண்டாமையை கடைப் பிடித்ததாலே பெரியார் அக்கொடு மைகளைக் கண்டு எதிர்த்தார்.


நான் ஒரு சனாதனி என்று 1920வாக்கில் தன்னை அறிவித்துக் கொண்டவர் காந்தி. பெரியார் என்ற மகத்தான தலைவரைச் சந்தித்த பின்புதான் அக்கோட்பாடுகளில் இருந்து காந்தி பின் வாங்கினார். வைக்கத்தில் நடைபெற்ற போராட்டம் வெற்றி பெற்றதை அடுத்து போராட்டத்தின் வெற்றி புகழ் பெரியாருக்கு சென்று விடக் கூடாது என்று ராஜாஜி கருதினார். அதற்கான சூழ்ச்சிகரமான வேலைகளையும் அவர் செய்தார். அதற்கு அவர் காந்தியை பயன்படுத்தினார். பெரியார் பெருந்தன்மையோடு சொன் னார், "போராட்டத்தின் வெற்றியின் புகழ் யாருக்கு வேண்டுமானாலும் செல்லட்டும். வைக்கம் வீதிகளில் அனைத்து தரப்பினரும் சென்று வரு வார்களானால் அதுவே எனக்கு கிடைத்த மிகப் பெரும் வெற்றி" என்று. பெரியார் வைக்கம் போராட்டத் திற்கு சென்ற போது ராஜாஜி, "நம் தேசத்தில் பல பிரச்சனைகள் இருக்கும் போது நீங்கள் ஏன் பிற தேசத்திற்கு சென்று போராட வேண்டும்" என்று கேள்வி எழுப்பினார். அதற்கு பெரியார் கூறினார்: "எந்த தேசம் அடிமைப்பட்டுக் கிடக்கிறதோ, எங்கு மக்கள் அடக்கு முறையின் கீழ் அடிமைப்பட்டு கிடக்கிறார்களோ அவர்களுக்காக நான் போராடுவேன், எனக்கு நம் தேசம், பிறதேசம் என்று பாகுபாடெல்லாம் கிடையாது". கியூபப் புரட்சியாளர் சேகுவேராவைப் போல இப்படி முழங்கினார் பெரியார்.

வைக்கம் போராட்டத்தில் பெரியார் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்ததை அவரது இணையர் நாக ம்மையிடம் கேட்டபோது, என் கணவர் ஈ.வே.ராமசாமி அவர்கள் இதுபோன்று இன்னும் பல போராட்டங்களை கையில் எடுக்க வேண்டும், அவருக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் இன்னும் கூடுதலான தண்டனைகள் கொடுத்தாலும் அதை அவர் எதிர்கொள்வார்; அந்த பாக்கியத்தை எங்களுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் கொடுக்க வேண்டும் என்று உணர்ச்சி பொங்கக்கூறினார். 1824 இல் வள்ளலார் தோன்றி சனாதனத்திற்கு எதிராகக் குரல்கொடுத்தார். 1924 இல் வைக்கம் போராட்டத் தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான போராட்டத்தை பெரியார் முன்னெடுத்து வெற்றி கண்டார். 2024 இல் நமக்கான போராட்டத் தை நாம் முன்னெடுத்து இந்தியா நமக் கானது என்பதை உருவாக்க வேண்டும்.

திருச்சியில் ஆகஸ்ட் 19 அன்று தமுஎகச நடத்திய "வள்ளலார் 200; வைக்கம் 100" கலைவிழாவில் ஆற்றிய உரையிலிருந்து...

**நன்றி :**
**தீக்கதிர்**
**23.8.2023**

# ஆண்டியும் போண்டியும்



**ஆண்டி :** ஏன்ய்யா; "சென்னை தினத்தை", "மெட்ராஸ் தினம்" என்று திரித்துக் கூறியிருக்கும் ஆளுநர் ரவிக்கு, கண்டனக் கணைகள் குவிகின்றனவே?

**போண்டி : ஆமாய்யா; தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், அறிஞர் அண்ணா ஆகிய அரிய ஆளுமைகளின் பெயர்களைக் கூறத் தவறியது, தேசிய கீதத்தைத் தவிர்த்தது, தமிழ்நாடு என்பதை மறுத்தது, நீட் தேர்வுக்கு ஆதரவு - என்று தொடர்ந்து சர்ச்சைகளை உருவாக்கி, அதன் மூலம் தன்னை உற்சாகப்படுத்திக் கொண்டு, தமிழர் மீது தனக்குள்ள பகை உணர்வையும், பா.ஜ.க.-ஆர்.எஸ்.எஸ். மீதுள்ள பாசத்தையும் வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டே வருகிறார்.**

**அவற்றின் தொடர்ச்சியாகத்தான் தற்போது, "மெட்ராஸ் தினம்" என்று கூறி சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறார்.**

**இந்த ஆளுநர் ரவியை, சர்ச்சை பெருக்கி, முரண்பாடுகளின் மூட்டை - என்று அடைமொழி இட்டுதான் அழைக்க வேண்டும்!**

ஒன்றிய பா.ஜ.க. அரசு

# மோடியின் இமேஜை காப்பதில்தான் கவனம் செலுத்துகிறது!

## காங்கிரஸ் கடும் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக.25-

ஒன்றிய பா.ஜ.க. அரசு மோடியின் புகழை காப்பாற்றுவதில் மட்டுமே கவனம் செலுத்துவதாக காங்கிரஸ் கடுமையாக சாடியுள்ளது. கடந்த ஜூலை மாதத்தில் சைவ உணவின் விலை 28% உயர்ந்துள்ளதாகவும், தொடர்ந்து 3 மாதங்களாக உணவின் விலை உயர்ந்துள்ளதற்கு காரணம் காய்கறிகளின் விலை உயர்வு என ஊடகங்களில் செய்தி வெளியானது. இதனை சுட்டிக் காட்டி காங்கிரஸ் பொது செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கூறியதாவது, "மோடி அரசின் தவறான பொருளாதார கொள்கைகளால் ஒருபுறம் பணவீக்கம் அதிகரித்து கொண்டே செல்கிறது.

மறுபுறம் விவசாயிகள் தங்கள் விளை பொருட்களுக்கு சரியான விலை கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறைந்தபட்ச ஆதரவு விலை வாக்குறுதி இது வரை நிறைவேற்றப்படவில்லை. விவசாயிகள் குறைந்த விலைக்கு தானியங்களை விற்க வேண்டிய நிலையில் உள்ளனர். ஆனால் விளை பொருட்கள் முதலாளிகளின் கிடங்குகளுக்கு சென்றவுடன் திடீரென்று அதன் விலை உயர்ந்து விடுகிறது. வெங்காயம் மீதான ஏற்றுமதி 40% உயர்த்தப்பட்டதால் ஆசியாவின் மிகப்பெரிய வெங்காய ஏற்றுமதி சந்தையான நாசிக்கில் வெங்காய ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது.

அரிசி, பருப்பு, மாவு, காய்கறி உள்ளிட்ட அத்தியாவசிய உணவு பொருட்களின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தினசரி சமையல் செலவு ரூ.100 ஆகிறது. விண்ணை முட்டும் விலைவாசி உயர்வை பற்றி கவலைப்படாத ஒன்றிய பா.ஜ.க. அரசு, மோடியின் புகழை கட்டி காப்பதிலும், பெருநிறுவன முதலாளிகளுக்கு நன்மை செய்தில் மட்டுமே கவனம் செலுத்துகிறது.

இதனை மக்கள் இப்போது நன்றாக புரிந்து கொண்டுள்ளனர்" என்று கூறியுள்ளார்.








முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை கொண்டாடும் விதமாக திருச்சி குண்டூர் OFT வளைவு அருகே அமைக்கப்பட்ட 100 அடி உயர கொடிக் கம்பத்தில் கழகப் பொருளாளர் கழக நாடாளுமன்ற மக்களவை குழுத் தலைவர் டி.ஆர். பாலு அவர்கள், கழக இரு வண்ணக் கொடியேற்றி திராவிட இயக்கத் தலைவர்களின் உருவம் பதிக்கப்பட்ட கல்வெட்டுகளைத் திறந்து வைத்து சிறப்பித்தார். அதே போல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை கொண்டாடும் விதமாக, திருச்சி குண்டூர் ஆர்.எஸ்.வி. திருமண மண்டபத்தில், மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக கழகப் பொருளாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு, 'கலைஞர்' ஆய்வரங்கத்தைத் தொடங்கி வைத்து சிறப்பித்தார். திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன், விடுதலை சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச்செயலாளர் ஆளூர் ஷாநவாஸ் எம்.எல்.ஏ., ஆகியோர் கலைஞர் அவர்களின் பன்முகத் திறமைகளைப் பற்றிய ஆய்வுரையை நிகழ்த்தினார்கள். இந்நிகழ்வில் மாநகர செயலாளர் மு.மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், ஒன்றிய செயலாளர் கங்காதரன் மற்றும் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்துகொண்டார்கள்.